**செய்தி வெளியீடு எண்: 1092** **நாள்:12.11.2021**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 2021-22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

"ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 512 பள்ளி மாணாக்கர் விடுதிகளில் சமையலுக்கு உதவியாகவும் மாணாக்கருக்கு உணவினை உரிய நேரத்தில் வழங்கிட ஏதுவாகவும், தலா ரூ.9,000/- வீதம் 512 மின் அரைப்பான்கள் மொத்தம் ரூ.46.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

2. ஆதிதிராவிடர் நல விடுதிகளில், 50 மாணாக்கர்களுக்கு குறைவாக உள்ள 512 ஆதிதிராவிடர் நல பள்ளி/கல்லூரி விடுதிகளுக்கு சமையலுக்குத் தேவையான மசாலாப்பொருட்களை மிக விரைவாக அரைத்து எடுக்க ஏதுவாக உயர் தரமான மற்றும் பழுது உறுதி உள்ளதாகவும் கொண்ட 512 மின் அரைப்பான்களை தலா ரூ.9000/- வீதம் ரூ.46,08,000/- (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் வாங்கி வழங்கிட நிருவாக அனுமதி அளித்து, அரசாணை (நிலை) எண்.81 ஆதி(ம)பந(ஆதிந.4) துறை, நாள் 28.10.2021 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**